# ஏப்ரல்- 29 - பாஸ்கா காலம்5ம் வார ஞாயிறு

**"நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" (யோ 15:5)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி9 : 26 – 31

அந்நாட்களில் சவுல் எருசலேம் நகரத்துக்கு வந்தபோது சீடர்களுடன் சேர்ந்து கொள்ள முயன்றார். ஆனால் அவரும் ஒரு சீடர் என்பதை நம்பாமல் அனைவரும் அவரைக் கண்டு அஞ்சினர்.பர்னபா அவருக்குத் துணை நின்று அவரைத் திருத்தூதர்களிடம் அழைத்துச் சென்றார். பவுல் ஆண்டவரை வழியில் கண்டதுபற்றியும் ஆண்டவர் அவரோடு பேசியதுபற்றியும் அவர் தமஸ்குவில் இயேசுவின் பெயரால் துணிவுடன் உரையாடியது பற்றியும் பர்னபா அவர்களுக்கு விளக்கிக் கூறினார்.அதன்பின் சவுல் அவர்களோடு சேர்ந்து எருசலேமில் அங்கும் இங்குமாகச் சென்று ஆண்டவரின் பெயரால் துணிவுடன் பேசிவந்தார்.கிரேக்க மொழி பேசும் யூதரிடம் சென்று அவர்களோடு வாதாடினார். அவர்கள் அவரைக் கொன்றுவிட முயன்றார்கள்.ஆனால் அவரோடு இருந்த சகோதரர்கள் இதை அறிந்து அவரைச் செசரியாவுக்குக் கூட்டிச்சென்று அங்கிருந்து தர்சு நகருக்கு அனுப்பி வைத்தார்கள்.யூதேயா, கலிலேயா, சமாரியா ஆகிய பகுதிகளிலெல்லாம் திருச்சபை வளர்ச்சியுற்று, ஆண்டவருக்கு அஞ்சி நடந்து, அமைதியில் திளைத்து, தூய ஆவியாரின் துணையால் பெருகிவந்தது.

**பதில்பாடல் :** ஆண்டவரே நான் சொல்லும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக.

## இரண்டாம் வாசகம் : 1 யோவான் 3 : 18 – 24

பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்.இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என அறிந்து கொள்வோம் நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தாலும், கடவுள் திருமுன் நம் உள்ளத்தை அமைதிப்படுத்த முடியும்.ஏனெனில் கடவுள் நம் மனச்சான்றைவிட மேலானவர் அனைத்தையும் அறிபவர்.அன்பார்ந்தவர்களே, நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதிருந்தால் நாம் கடவுள் திருமுன் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க முடியும்.அவரிடம் நாம் எதைக் கேட்டாலும் பெற்றுக் கொள்வோம் ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறோம் அவர் திருமுன் அவருக்கு உகந்தவற்றையே செய்து வருகிறோம்.கடவுள் நமக்குக் கொடுத்த கட்டளைப்படி, அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்தவேண்டும். இதுவே அவரது கட்டளை.கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர் அவரோடு இணைந்திருக்கிறார் கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார். கடவுள் நம்மோடு இணைந்திருக்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய தூய ஆவியால் அறிந்து கொள்கிறோம்.

## நற்செய்தி : யோவான்15 : 1 – 8

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:,"உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்.என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனிதருமாறு கழித்துவிடுவார்.நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்.நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது.நானே திராட்சைச் செடி நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும்.நீங்கள் என்னுள்ளும் என்வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.நீங்கள் மிகுந்த கனி தந்து என்சீடராய் இருப்பதே என்தந்தைக்கு மாட்சி அளிக்கிறது" என்றார்.

**தியானம் :** திராட்சைக் கொடி அதன் செடியுடன் இணைந்து இருந்தால்தான் பலன் தர முடியும், உடலின் உறுப்புக்கள் அனைத்தும் உடலுடன் இணைந்திருக்க வேண்டும். தனித்தனியாக பிரிந்துபோனால் அது உடல் அல்ல. அவ்வாறே நாமும் கடவுளுடன் இணைந்து இருக்க வேண்டும் என்பதனை இன்றைய வாசகங்கள் எமக்கு அறிவுறுத்துகின்றன. துன்பம் வரும்போதும், இன்பம் வரும்போதும் நாம் கடவுளுடன் இருக்க வேண்டும் இன்பத்தில் கடவுளை மறப்பதும், துன்பத்தில் அவரை நாடுவதும் எமது வாடிக்கையாகி விட்டது. தாம் இருப்பதை மக்களுக்கு உணர்த்தத்தான் இறைவன் துன்பத்தை தருகின்றாரோ என்று நினைக்க தோன்றுகின்றது. தேவை ஏற்படும்போது கடவுளைத் தேடுவோம், தேவை முடிந்ததும், அடுத்த தேவை வரும்வரை அவரை மறந்து விடுவோம்,. இதனையா இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார்? கடவுளால் ஆகாத காரியம் என்று எதுவும் இல்லை. தமது சீடர்களை கொல்ல நினைத்த பவுலை மாற்றவில்லையா? தமது கருவியாக பயன்படுத்த வில்லையா? பல புனிதர்களின் வாழ்வு முதலில் கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்க வில்லை. அவர்கள் கடவுளை சந்தித்த பின்பு மாற்றம் பெற்று புனித வாழ்வு வாழ்ந்ததால் புனிதர்கள் ஆனார்கள். எமது வாழ்வுதான் எம்மை மற்றவர்களிற்கு வெளிக்காட்டுகின்ற அடையாளம். அது யேசுவை காட்டவேண்டும். அன்பு, பொறுமை, தாழ்ச்சி, மன்னிக்கும் மனப்பான்மை எம்மில் இருக்க வேண்டும். வீண் பெருமை பேசக் கூடாது. சொல்லில் அல்ல, செயலில் வெளிப்படுத்தப் பட வேண்டும். நல்லவை செய்ய காலம் நேரம் பார்க்கக் கூடாது. எம்மால் முடிந்தால் எப்போதும் செய்யலாம். எனவே எல்லோருடனும் அன்புறவில் வாழ்வோம். பிரிந்து செல்வதை விட இணைந்து செல்லவோம். கடவுளின் அன்பை கண்டு கொள்வோம்.